**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 320/2011**

**வா.சா. 2**

சாட்சியின் பெயர் : செல்வக்கோடி (கிராம நிர்வாக அலுவலர்)
தகப்பனார் பெயர் : லட்சுமணராஜ்
வயது : 35
தொழில் :
மதம் :
ஜாதி :
கிராமம் : வடமதுரை
தாலுகா : வேடசந்தூர்
மாவட்டம் : திண்டுக்கல்

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 08.08.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வடமதுரை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு இருந்த ராமகிருஷ்ணன் அவர்களுக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் இன்று வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி ராமகிருஷ்ணன் தற்போது சித்துவார்பட்டி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலராக பணிமாறுதல் செய்யப்பட்டதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

தாவா சொத்தான சர்வே எண். 2258/2F க்குரிய என்ன என்ன ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன் என்றால் அதற்குரிய புலவரைபடம், கூட்டுவரைபடம், அடங்கல், சிட்டா ஆகியவை ஆகும். சர்வே எண். 2258/2F க்குரிய அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் ராமசாமி பெயரில் உள்ளது. அது தொடர்பான அடங்கல் சாட்சி சான்றாவணம் Ex.x1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது தொடர்பான புலவரைபடம் சாட்சி சான்றாவணம் Ex.x2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது தொடர்பான கூட்டுவரைபடம் சாட்சி சான்றாவணம் Ex.x3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண். 2258/2F

க்குரிய அ பதிவேடு யார் பெயரில் உள்ளது என்றால் V.முத்தக்கவுண்டர் தற்போது அவருடைய மகன் ராமசாமி பெயரில் உள்ளது. அந்த அ பதிவேடு சாட்சி சான்றாவணம் Ex.X4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.2258/2F க்குரிய பட்டா எண்.4745 என்பது ராமசாமி பெயரில் உள்ளது. அந்த பட்டா சாட்சி சான்றாவணம் Ex.X5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண். 2258/2F க்குரிய புலவரைபடத்தில் பாதை எதுவும் கண்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கண்ட சர்வே எண்ணில் கூட்டுவரைபடத்தில் பாதை கண்டுள்ளதா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நத்தம் சர்வே எண்.2259 க்குரிய ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. சர்வே எண். 2258/2F அது எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் புலவரைபடப்படி வடபுறம் அமைந்துள்ளது. சர்வே எண். 2259 என்பது அயன் புஞ்சை கிடையாது. ஏனென்றால் அது நத்தம் சர்வே எண்ணாகும். சர்வே எண்.1887/1A என்பது முத்துச்சாமி பெயரில் உள்ளது. சர்வே எண்.2258/2F க்கு சர்வே எண்.1887/1A எந்த பகுதியில் அமைந்துள்ளது என்றால் அதை ஒட்டி அமைந்துள்ளது. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வழக்கு சொத்திற்கு சென்று பார்த்துள்ளேன். சர்வே எண்.2258/2F ல் உள்ள நிலத்தை அடைய வேண்டும் என்றால் நத்தம் சர்வே எண். 2259 மூலமாக தான் அடைய முடியும். சர்வே எண். 2258/2Fன் வழியாக சென்று சர்வே எண்.1887/1A நிலத்தை அடைய முடியும். சர்வே எண்.1887/1A விற்கு சர்வே எண்.2258/2Fன் மூலமாக தான் சென்றடைய முடியும் என்றால் சர்வே எண். 1887/1A விற்கு கூட்டுவரைபடத்தில் எவ்வித அரசாங்கப்பாதையும் குறிப்பிடப்படவில்லை.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**